WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-31

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

24-06-2026

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 31, :24-06-2026

தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

1 எச்சவியலுள் 'பொருள் கோள்' என்ற பகுதி முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். செய்யுளொன்றைப் புரிந்து கொள்ளவும், தெளிந்து கொள்ளவும் பெரிதும் உதவுகின்ற கருவியே இதுவாகும். கொள்வது கோள். அவ்வாறு கொள்வதே 'கொள்கை' ஆனது. இவ்வாறு பொருள் கொள்ளும் முறைகள் நான்கு என்கிறார் தொல்காப்பியர்.

"நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவை நான்கென்ப மொழிபுணர் இயல்பே" (404)

இ-ள்: இவை நான்கும் செய்யுளிடத்தே தம்முட் புணருமாறு இயல்புடைத்து எ-று

2

முதலில் 'நிரனிறைப் பொருள்கோள்' பற்றி உரைக்கிறார்.

"அவற்றுள், நிரல்நிறை தானே வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச் சொல்வேறு நிலைஇப் பொருள் வேறு நிலையல்" (405)

இ-ள்: அந்நான்கினுள் நிரனிறையாவது வினையானும், பெயரானும் ஆராயத் தோன்றி இச் சொல் வேறு நிற்பப் பொருள் வேறு நிற்றலாம் எ-று

இதனூடே, **நிரனிறைப் பொருள் கோளாவது**, வினைச் சொல்லால் வருவதும்[1], பெயர்ச் சொல்லாய் வருவதும்[2], அவ்விரு சொல்லால் வருவதும்[3] என மூன்று வகையாம். **ஆக வினைச் சொற்களையும், பெயர்ச் சொற்களையும்** ஒரு நிரலாயும், **அவை கொள்ளும் பொருளை** மற்றுமொரு நிரலாயும் நிறுத்திப் பொருள் கொள்ளும் முறையே '**நிரனிறைப் பொருள் கோள்**' முறையாகும்.

எ-டு:

வினை நிரனிறை :

"மாசு போகவும் காய்பசி நீங்கவும்
கடிபுனல் மூழ்கி அடிசில் கைதொட்டு"

இச் செய்யுளில்

மாசு போக -வினை, காய்பசி நீங்க - வினை,

கடிபுனல் மூழ்கி - வினை,

இவ் வினைகளை உரிய பெயர்களுடன் நிரனிறை செய்ய;

"மாசு போகக் கடிபுனல் மூழ்கி, காய்பசி நீங்க அடிசில் கைதொட்டு"

என வந்தியையும்.

பெயர் நிரனிறை :

"கொடி குவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல் பிடிபினை மஞ்ஞை
நடை நோக்கும் சாயல் வடிவினளே வஞ்சி மகள்"

இச் செய்யுளில் 9 பெயர்ச் சொற்கள் வந்தன. ஆதலான் இது 'பெயர் நிரனிறை'.

(யா/கா, மேற்கோள், திருக்குறள்?)

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு".

இப் பெயர்களை உரிய உரியவற்றுடனும், வினையோடும் நிரனிறை செய்ய, இப்படிப் பொருளுடன் அமையும்:

"நுசுப்பு கொடி, உண்கண் குவளை, மேனி கொட்டை, முகம் மதி, வாய் பவளம், முறுவல் முத்து, நடை பெண் யானை, நோக்கு பெண்மான், சாயல் மயில்"

-இவ்வளவும் ஒன்றாய் அமைந்த வடிவு கொண்டவளே வஞ்சி நாட்டுப் பெண் என்பதே பொருளாகும்.

3

அடுத்து 'சுண்ணப் பொருள்கோள்'

"சுண்ணம் தானே பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல் (406)

இ-ள்:

சுண்ணமாவது இயல்பாக அமைந்த ஈரடிக்கண் உளவாகிய எண்சீரைத் துணித்து, இணையும் வழியறிந்து சுட்டி இயற்றப்படுவதாம் எ-று

எ-டு:

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு - நிலையென்ப
கானக நாடன் சுனை"

(பழமொழி 400, சிந்தடி வெண்பா)

இதனைச் சுண்ண முறையிற் பொருள் கோட இவ்வாறு வரும் :

"சுரை மிதப்ப அம்மியாழ வரையனைய
யானைக்கு நிலை முயற்கு - நீத்து என்ப
கானக நாடன் சுனை"

சந்தனக் குழம்பு போல சிதறிப் பரவிக் கிடத்தலால், 'சுண்ணம்' என்றார்.

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 31, :24-06-2026

தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

பொ-ள் :

(வரை - மலை. கானகநாடன் - காட்டை நாடாகவுடைய தலைவன். சுனை - மலையருவி, நீரூற்று)

4 இனி ' அடிமறிப் பொருள் கோள் ":

"அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே" (407)

இ-ள்:
அடிமறிப் பொருள் கோளாவது, சீர் நின்றாங்கு நிற்ப, அடிகள் தத்த நிலையில் திரிந்து ஒன்ற, நிலைக் களத்து ஒன்று சென்று நிற்கும் எ-று. ஆக எல்லாவடிகளும் எவ்விடமும் சென்று பொருந்திப் பொருள் கொள்ளும்.

எ-டு:

"மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
ஏறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே" **(குறுந்தொகை)**

இது நாலடிச் செய்யுள்களுக்கே பெருமளவு பொருந்தி வரும்.

5 இனி 'மொழிமாற்றுப் பொருள் கோள்'

**"மொழிமாற் றியற்கை சொல்நிலை மாற்றிப்
பொருளெதிர் இயைய முன்னும் பின்னும்
கொள்வழிக் கொளாஅல்"(409)**

இ-ள்:

மொழிமாற்றின் இயல்பானது, பொருள்எதிர் இயையுமாறு சொல் நிலையை மாற்றி, முன்னும் பின்னும் கொள்ளும்வழி கொண்டு கொளுவுதலாம் எ-று

எ-டு;

"ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேல் தண்ணுமை - காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தான்நாணும் தோளான்
நிறனுள்ளூர் உள்ளது அலர்" (புறப்பாட்டு)

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 31, :24-06-2026
தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

பொ-ள்:

(பறம்பு - மலை. தண்ணுமை - முழவு, போர் முரசு.
காரி - மலையமான் திருமுடிக்காரி. முள்ளூர் - மலைப்பகுதி.
வீ - பூக்கள். வேங்கை - மரம். நிறன் - நிறம். அலர் - பழிச்சொல்)

இதனை 'மொழிமாற்றுப் பொருள்' கோட இவ்வாறமையும்:

"பாரி பறம்பின்மேல் தண்ணுமை தான்நாணும் தோளான்
நிறன் விறன்முள்ளூர் வேங்கை வீ நாணும்
உள்ளூர் அலர் ஆரிய மன்னர் பறையில் எழுந்தியம்பும்"

- இவ் வகுப்பு நிறைவு --

ஐயம் தெளிதல்